Tamilmanam – International Research Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 3049-0723
pISSN:3107-7781

தமிழ்மணம்
Peer-reviewed · Open access · Google Scholar · Crossref DOI · SJIF
Imapact Factor 3.5 · Monthly
DOI: 10.63300/tm12052026.26
Vol. 12, No. 05 (2026) 12 05 2026 347–357 TIRJTS-2026-0004

RESEARCH ARTICLE

திணை வழி காணலாகும் பண்டமாற்று முறை

Barter System as Seen Through the Thinai (Ecoregions)

மு.ஐஸ்வர்யா[1,*], முனைவர் ஆ. பாப்பாத்தி[2]
[1] முனைவர் பட்ட ஆய்வாளர், முதுகலை மற்றும் தமிழாய்வு துறை, பு.முட்லூர், சிதம்பரம் 608 102.
[2] உதவிப் பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வு துறை, அரசு கலைக்கல்லூரி, பு.முட்லூர், சிதம்பரம் 608 102.
***Corresponding author:** மு.ஐஸ்வர்யா, iswarya515151@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 10 October 2026
Revised: 12 October 2026
Accepted: 15 October 2026

Article ID
TIRJTS-2026-0004

Peer review
Double-blind peer review

Keywords
Barter System (Panda Maatru)
Ecoregion / Landscape (Thinai)
Paddy / Rice (Nel)
Salt (Uppu)
Elephant Tusk (Yaanai Thantham)

ABSTRACT

The ancient Tamils understood the fivefold division (Ainthinai) of the landscape and shaped their way of life accordingly. Sangam literature poems reveal that people organized their daily lives in harmony with their natural surroundings and environment. In Sangam literature, descriptions of nature do not exist in isolation; instead, human lifestyle is portrayed through the synthesis of Muthal (time and space), Karu (native flora, fauna, and elements), and Uri (human emotions and behaviors) as codified by Tholkappiyar. This reflects the environment-bound existence of ancient Tamils, serving as a treasury of life that illustrates how all human needs were fulfilled.

How to cite this article: மு.ஐஸ்வர்யா, & முனைவர் ஆ. பாப்பாத்தி (2026). திணை வழி காணலாகும் பண்டமாற்று முறை. *Tamilmanam – International Research Journal of Tamil Studies, 12*(05), 347–357. https://doi.org/10.63300/tm12052026.26
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

ஆய்வு சுருக்கம்

நில அமைப்பில் ஐந்நிலப் பாகுபாட்டைத் தமிழர் அறிந்து, அதற்கேற்பத் தங்கள் வாழ்வமைப்பை உருவாக்கிக் கொண்டனர். மக்கள் தம் வாழ்வும் சூழலுக்கு ஏற்ப தங்களது வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர் என்பதை சங்க இலக்கிய பாடல்கள் உணர்த்துகின்றன. சங்க இலக்கியத்தில் தனிப்பட்ட முறையில் இயற்கை வர்ணனை இடம்பெறவில்லை. மாறாகத் தொல்காப்பியர் குறிப்பிடும் முதல், கரு,உரி மூன்றும் அமைய இலக்கியத்தின் மக்களின் வாழ்க்கை முறை

சித்தரிக்கப்பட்டுள்ளது. இது பழந்தமிழர் தம் சூழ்நிலையின் வாழ்வைக் காட்டுவதாகவும் உள்ளது. மக்களின் அனைத்து தேவையையும் நிறைவேற்றும் வாழ்வியல் கருவூலமாக திகழ்கிறது.

கலைச்சொற்கள்:

1.பண்ட மாற்று 2.திணை 3.நெல் 4.உப்பு 5.யானை தந்தம்.

முன்னுரை

சங்க காலத் தமிழக பொருளாதார இயற்கையோடு இயந்த நிலம் சார்ந்த ஓர் வாழ்வியல் முறையாகும் .**“திணை”**கோட்பாட்டின் அடிப்படையில் பிரிக்கப்பட்ட ஐந்து நிலங்களில் (குறிஞ்சி, முல்லை, மருதம் ,நெய்தல் ,பாலை) தமக்கே உரிய தனித்துவமான இயற்கை வளங்களையும் உற்பத்தி பொருட்களையும் கொண்டிருந்தன. ஒரு நிலத்தில் உபரியாக இருக்கும் பொருட்களைக் கொடுத்து தங்களுக்குத் தேவையான மற்றொரு நிலத்தின் பொருளைப் பெற்றுக் கொள்ளும் **“பண்டமாற்று முறை”** (Barter system) சங்க காலப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கியது. இதனை இலக்கியங்களின் வழி எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

நில அமைப்பும் உற்பத்திப் பொருட்களும்

சங்ககாலத்தில் நிலத்தினை ஐந்து வகையாகப் பகுத்து வைத்தனர். தொல்காப்பியர் முதல் பழங்கால இலக்கிய அனைத்திலும் குறிஞ்சி ,முல்லை, மருதம் ,நெய்தல் ,பாலை எனப் பிரித்து அதற்கென உரிப்பொருள் வகுத்தனர். பண்ட மாற்றைப் புரிந்து கொள்ள ஒவ்வொரு நிலத்திலும் கிடைத்த முதன்மை பொருட்களை அறிவது அவசியமாகும்.

குறிஞ்சி (மலைப் பகுதி)

மலையும் மலை சார்ந்த பகுதியும் ஆகும் அங்கு வாழும் மக்கள் தங்களிடம் கிடைக்கும் தேன் கிழங்கே யானைத் தந்தம் அகில் சந்தனம் திணை மான்கறி போன்ற பொருட்களைச் சேகரித்து அதனை மற்றொரு நிலத்திற்கு சென்று பொருளுக்குப் பொருள் மாற்றி வாங்கி வந்தனர்.

முல்லை (காட்டுப்பகுதி)

காடும் காடும் சார்ந்த பகுதியாகும் முல்லை திணையின் ஆயர் ஆய்சியர் பால் ,தயிர், நெய் ,மோர், வரகு ,சாமை போன்றவற்றை பண்டமாற்றம் செய்தனர்.

மருதம் (வயல்வெளி)

வயலும் வயல் சார்ந்த இடமும் ஆகும் மருத நிலம் தண்ணீர் வளம் நிறைந்தது இங்கு மக்கள் தங்களிடம் கிடைக்கும் நெல் கரும்பு அவள் நன்னீர் மீன்களைப் பண்டமாற்றமாக மாற்றி வாழ்ந்து வந்தனர்.

நெய்தல் (கடற்கரை)

கடலும் கடல் சார்ந்த இடமும் ஆகும் மணல் பகுதிகள் உப்பங்கழிகள் மற்றும் கடற்கரைகள் ஆகியவை நெய்தலின் முக்கிய இடமாகும். இங்கு வாழும் மக்கள் உப்பு மீன்கள் முத்துக்களைப் பண்டமாற்றம் செய்து வந்தனர்.

பாலை வறண்ட நிலம்

குறிஞ்சியும் முல்லையும் இயற்கை சூழல் சூழ்நிலைக்கு மாறாக இருக்கிறது இதனால் வறண்ட மணல் பகுதியாக மாறி மணலும் மனம் சார்ந்த இடமாக இருக்கிறது இங்கு இருக்கும் மக்கள் வழிப்பறையில் கிடைக்கும் பொருட்களை வேட்டையாடப்பட்ட விலங்குகளின் இறைச்சியையும் உணவாக உண்டு வாழ்ந்து வந்தன அதனால் இந்நிலத்தில் பண்டமாற்றம் நடைபெற்றதாகத் தெரியவில்லை

திணைகளுக்கு இடையிலான பண்டமாற்று முறைகள் ஒவ்வொரு திணையும் பிற திணைகளுடன் மேற்கொண்ட வாணிக பரிமாற்றங்கள் சங்க இலக்கியத்தில் மிக அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன.

நெய்தலும் மருதமும்(உப்பும் நெல்லும்)

சங்ககாலத்தில் முக்கியமான பரவலான பண்டமாற்று நெய்தல் நில உப்பு இருக்கும் மருதநில நெல்லிக்கும் இடையில் நடைபெற்றுள்ளது உப்பை ஏற்றி செல்லும் வணிகர்கள் உமணர் ஊர் ஊராகச் சென்று

நெல்லைத் தந்து உப்பைப் பெற்றுக் கொள்ளுங்கள்என்று கூவி விற்றதை அகநானூறு குறிப்பிடுகிறது.

கதழ்கோல் உயர் காதல் மடமகள்

சில்கோல் எவ்வகை தெளிர்ப்ப வீசி

நெல்லின் நேரே வெண்கல் உப்பெனச்

சேரிவிலை மாறு கூறலின். (அகம் 140: 5-8)

நெய்தல் நில மகளிர் தங்களின் உப்பளத்தில் விளைந்த உப்பை மாற்றி அதற்கு ஈடாக நெல்லினை பெற்று சென்றதை அம்மூனார் கூறுகிறார்.

கடற்கரையைச் சார்ந்த உப்பளங்களில் நெய்தல் நில மக்கள் உப்பு விளை வித்தனர்கள். உப்பு வணிகர்கள் மாட்டு வண்டிகளில் நெல்லைக் கொண்டு வந்து கொடுத்து உப்பை மாற்றிக் கொண்டு போனார்கள்.

“**தந்நாட்டு விளைந்த வெண்ணெய் தந்து**

பிறநாட்டு உப்பின் கொள்ளை சாற்றி

…………………………………………………

உமணர் போகவும்" (நற்றிணை 183)

என்று நற்றிணையில் கூறுகிறார்.

" நெல்லும் உப்பும் நேரே ஊரீர்

கொள்ளிரோ வெனச் சேரிதொறும்" (அகம் 390 :8-9)

உப்பை நெல்லுக்கு மாற்றி உப்பு வணிகர் தமக்கு கிடைத்த நிலை சிறுபடகுகளில் ஏற்றி கொண்டே கழிகளில் ஒட்டி சென்றதை கடியலூர் உத்திரன் கண்ணனார் கூறுகிறார்

"**குறும்பல்லூர் நெடுஞ்சோணுட்டு**

வெள்ளை யுப்பின் கொள்ளை சாற்றி

நெல்லொடு வந்த வல்வாய்ப் பற்றி " (பட்டினப்பாலை 28-30)

என்று பட்டினப்பாலையிலும் அவர் கூறுகிறார்.

உப்பை நெல்லுக்கு மாற்றியதை உலோச்சனர் கூறுகிறார்.

"உமணர் தந்த உப்பு நொடைநெல்" (நற்றிணை 254:6)

கடற்கரை ஓரத்தில் நெய்தல் நிலத்தில் வசித்த பரதவர் கடலிலே சென்று சுறா, இறால் முதலான மீன்களைப் பிடித்து வந்தார்கள். அவர்கள் கொண்டு வந்த மீனைப் பரதவ மகளிர் எளிதில் தானியத்துக்கு மாற்றினார் என்று குன்றியனார் கூறுகிறார்.

" இனிது பெறு பெரு மீன் எளிதினிற் மாறி"(நற்றிணை 239-3)

பரதவ மகளிர் கடல் மீனை நெல்லுக்கு மாற்றியதை நக்கீரரும் கூறுகிறார்.

" பசுமீன் தொடுத்த வெண்ணெய் மாஅத்

தயிர்மிதி மிதவை யார்த்துவம்" (அகம் 340: 14-15)

பரதவ மகளிர் கடல் மீனை திருவிழா நடக்கின்ற ஊர்களிற்குக் கொண்டு சென்று எளிதில் விற்றதைச் சீத்தலைச் சாத்தனார் கூறுகிறார்.

" **திமிலோன் தந்தக முக்கண் வயமீன்**

தழையணி அல்குல்செல்வத் தங்கையர்

விழவயர் மறுகின் விலையெனப் பகரும்

காலம் சிறுகுடி"(அகம் 320: 2-5)

மீனை நெல்லுக்கு மாற்றினார்கள் . பண்ட மாற்றினால் கிடைத்த நெல்லை அம்பில் ஏற்றிக்கொண்டு கழிகளின் வழியே வந்ததை

"**மீன் கொடுத்து நெல் Fit,**

மிசை அம்மணியின் மனைமறு க்குந்து" (புறம் 343:1-2)

புறநானூறு வழியில் பரணர் கூறுகிறார்.

" உப்பு தொடை நெல்லின் மூரல் வெண்சோறு" (அகம் 60: 4)

என்ற அடிகளின் மூலம் குடவாயில் கீரத்தனார் கூறுகிறார்.

நெல்லியின் அளவிற்கு நிகராகப் பெண் உறுப்புக்கள் மாற்றிக் கொள்ளப்பட்டது என்பதை சங்க நூலின் வழியே காண முடிகிறது பெரும்பாலும் நெய்தல் நில மக்கள் தங்களுக்குத் தேவையான நெல் தானியங்களை மருத நில மக்களிடம் இருந்து உப்பைக் கொண்டு பண்ட மாற்றம் செய்தனர் இதுவே சங்க காலத்தில் பொதுவாக காணப்பட்டன.

முல்லையும் மருதமும் (பால், மோர் ,தயிர், தானியங்கள்)

. ஆயர் குல மக்கள் தங்களது பசு மற்றும் எருமைகளிடமிருந்து கிடைத்த பால் தயிர் நெய் மோர் ஆகியவற்றை மருத நில கிராமங்களுக்குக் கொண்டு சென்று அங்கு விளைந்த நெல் கரும்பு மற்றும் தானியங்களைக் கொண்டு பண்ட மாற்றாகப் பெற்றன.

குறுந்தொகை பாடல் வரின் மூலம் முறையூர் முதுகொற்றனார் கூறுவது

"பாலோடு வந்து கூழொடு பெயரும்

யாடுடை இடையின் சென்னின்

சூடிய வெல்லலாம் சிறு பசு முகையே"(குறுந் 221:3-5)

முல்லை நிலத்தின் தலைவி தான் கொண்டு வந்த பாலை விற்று விட்டு அதற்கு மாற்றாகத் தனக்கு வேண்டிய உணவையும்(கூழ்)தானியத்தையும் பெற்றுக் கொண்டு தண்ணீர் இருக்கைக்குத் திரும்பும் ஏழை இடையன் என்று கூறுகிறார்.

பெரும்பாணாற்றுப்படையில் கடியலூர் உத்திர கண்ணனார் கூறியது

"நெல் இருள் விடியல் புள் எழ போகி

புலி குரல் மத்தம் ஒலிப்பு வாங்கி

ஆம்பி வான் புகை அன்ன கூம்பு புகழ்

உறை அமை தீம் தயிர் கலக்கி நுரை தெரிந்து

புகார் வாய் குளிச்சி பூ சுட்டு ,up,

நாள் மோர் மாறும் தன் மா மேனி

சிறு குழை தும்மல் வரும் காதின் பனை தோள்

குறு நெறி கொண்ட கூந்தல் இம்மக்கள்

அளை விலை உணவில் கிளை உடன் அருந்தி” (பெரும் 155-163)

பால் மோரை குடும்பம் அருந்தி எஞ்சியதைக் காட்சிய பெண்ணை நீ எடுத்து விற்று வரும் பணத்தை பொன்னாக வாங்காமல் கறவைக் கன்றுகளாக வாங்க பயன்படுத்திக் கொள். அதன் அதனுடன் மோர், தயிர் போன்ற பொருட்களைக் கொடுத்து அதற்கு மாறாகத் தானியத்தை பெற்றுப் வந்ததாகக் கூறுகிறார்

முல்லை நிலத்திற்கும் மருத நிலத்திற்கும் விளையாட பண்டமாற்று நிலையினை தெளிவாகக் காண முடிகிறது ஆயில் மகளீர் தங்களின் நிலத்தில் கிடைக்கும் மோர் தயிர் வெண்ணெய் போன்ற பொருளுக்கு ஈடாகத் தானியத்தைப் பெற்று வந்ததைத் தெளிவாக விளங்குகிறது

குறிஞ்சியும் மருதமும் (யான தந்தம், தேன், கிழங்கு ,மதுபானம் ,வறுத்த மீன்)

மலைவாசிகளான குறிஞ்சி மக்களின் தங்களிடம் உள்ள தேன், கிழங்கு, யானை தந்தம் போன்ற கிடைத்தப் பொருட்களை கொடுத்து வெள்ளையும் வறுத்த மீனையும் மதுபானத்தையும் பண்ட மாற்றம் செய்தனர். அவை,

அகநானூறு பாடல் வழியாக மாமூலனாரின் வரிகள் போல பகைவரின் மார்பினை அப்பினைச் செலுத்தும் வில்லுடைய இளைஞர் பலரான படையுடன் யானை தந்தத்தினை கொடுத்து அதற்கு ஈடாக கள்ளைப் பண்டமாற்றாகப் பெற்றுக் கொண்டனர் என்பதை,

“அருநிரத்து அழுத்திய அம்பிடர் பலருடன்

அண்ணல் யானை வெண்கோடு கொண்டு

நறவுநொடை நெல்லின் நாள் மகிழ் அயரும்” (அகம் 61:8-10)

காணலாம்.

மழை பெய்ததால் மூங்கில் மரம் காயும் காடு அந்த காடு வழியாகச் செல்லும் வணிகர் கூட்டத்தை அங்கு வெள்ளமுடன் வாழும் இளைஞர்கள் பண்பில்லாத தலைவனுடன் ,பொழுது விடிந்ததும், கோடு போட்டிருக்கும் வருத்தத்தோடும் மடிப்பு விடிந்த வயிறும் ,கொண்ட கல்விப்பவள் வீட்டின் முற்றத்தில் விலையாக தர ஏதும் இல்லாமையால் கல்லை பெற முடியாமல் தன் புதல்வன் தலையை நீவிக்கொடுத்து காட்டின் யானையின் தந்ததைகளை காட்டி கொண்டு வந்து கொடுக்கலாம் எனப் பண்டமாற்றத்தைக் கூறுகிறார். என்பதை

“ வரிகிளர் பணைத்தோள் , வயிறுஅணி தில்லை

அரிய லாட்டியர் அல்குமனை வரைப்பில்

மகழ்நொடை பெறாஅராகி, நனைகவுள்

காண யானை வெண் கோடு கட்டி

மன்றுஓடு புதல்வன் முன்தோலை தீவும்

அருமுனைப் பாக்கத்து அல்கி.... (அகம் 245: 8-13)

என்ற வரிகளின் மூலம் மதுரை மருத இளநாகனாரின் அகநானூற்றின் வரிகள் கூறுகிறது.

கானவர்கள் தேன் கிழங்கு கொடுத்து மதுபானத்தைப் பெற்றதை,

"தேனெய்யொடு கிழங்கு மாறியோர்

மீனெய்யொடு நறவு மறுகவுந்

தீங்கரும்போ டவல் வருத்தோர்

மான்குறையொடு மது மறுகவுந்" (பொருநர் 214-217)

என பெருநராற்றுப்படையில் முடத்தாமக் கண்ணியார் கூறுகிறார்.

மக்களுடன் பண்டமாற்று செய்ததைக் காண முடிகிறது.

பண்ட மாற்றத்தின் சிறப்பு அம்சங்கள்

பொருட்களின் மதிப்பீடு:நாணய புழக்கம் பரவலாகக் காலத்தில் நெல்லுக்கு உப்பு பொதுவாக மதிப்பு அளவீடுகளாக விளங்கின.

நம்பிக்கை சார்ந்த வணிகம்:பண்டமாற்று முறை வெறும் பொருளாதார தேவைக்காக மட்டும் இன்றி திடைகளுக்கு இடையேயான சுமுகமான சமூக உறவை வளர்க்கும் கருவியாக இருந்தது.

பெண்களின் பங்களிப்பு: சங்க கால பண்டமாற்று முறையில் பெண்களின் பங்கு முதன்மையாக இருந்தது ஆயர் மகளிர் போர் விற்க சென்றதும் உமண பெண்கள் உப்பு விற்கச் சென்றதும் குறிப்பிடத்தக்கது.

முடிவுரை

சங்க கால தமிழர்களின்" திணை வழி பண்டமாற்று முறை "என்பது வெறும் வணிகம் சார்ந்த செயல்பாடு மட்டுமல்ல; அது இயற்கையின் சமநிலையைப் பேணும் ஒரு வாழ்வியல் கலையாகும். ஒரு நிலத்தின் குறைபாட்டைப் பிரிதொரு நிலத்தின் உபரிக் கொண்டு நிறைவு செய்த இந்த முறை, தமிழர்களிடையே வேற்றுமையிலும் ஒற்றுமையையும், திணைகளுக்கு இடையிலான பிணைப்பையும் வலுப்படுத்தியது.

துணை நூற்பட்டியல்

References

சாமிக்கண்ணு, மா. – சங்க காலப் பொருளாதாரம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (NCBH), சென்னை.

சுப்பிரமணியன், ந. – சங்க கால வாழ்வியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

பிள்ளை, கே. கே. – தமிழக வரலாறும் பண்பாடும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

ராஜன், கே. – தொல்லியல் நோக்கில் சங்க காலம், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.

ஜெயராமன், ந. – சங்க இலக்கியத்தில் வணிகமும் பொருளாதாரமும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

சுப்பிரமணியன், ச. வே. – சங்க காலச் சமுதாயம், மெய்யப்பன் தமிழாய்வகம்.